(Regd. No. 69/79)

மகளிர் சுய உதவிக்குழு
புத்துணர்ச்சி இதழ்

# ஐ.வி.டி.பி மலர்

மொட்டு 18 மலர் 46

( தனிச்சுற்றுக்கு மட்டும் )

ஆகஸ்ட் 2023 - மார்ச் 2024

ஐ.வி.டி.பி யின்

## அடுத்த 5 ஆண்டு இலக்கு

ஐ.வி.டி.பி யின் 1 இலட்சம் உறுப்பினர்களுக்கு
HPV & மார்பகப் புற்றுநோய் பரிசோதனை மற்றும் மருத்துவச் சிகிச்சை
வழங்க, பெங்களூரு செயின்ட் ஜான்ஸ் மற்றும்
கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனைகளுடன்
புரிந்துணர்வு ஒப்பந்தம்.



கடந்த ஆண்டில் ஐ.வி.டி.பி யின் 10,101 சுய உதவிக்குழு
உறுப்பினர்களுக்கு புற்றுநோய் பரிசோதனைக்காக
₹ 1.60 கோடி

இலவச புற்றுநோய் உயர் சிகிச்சைக்காக
ஐ.வி.டி.பி செலவிட்டது ₹ 1 கோடி

₹ 2.60 கோடி




## நிறுவனர் இதயத்திலிருந்து...

அன்பார்ந்த உறுப்பினர்களே ! பணியாளர்களே !

*வணக்கங்களும், வாழ்த்துக்களும்...*

ஐ.வி.டி.பி யின் ஓராண்டு பணிகள் நிறைவுற்ற இத்தருணத்தில் இம்மலர் வாயிலாக உங்களோடு தொடர்பு கொள்வது மிக்க மகிழ்ச்சி. மகளிரைப் பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெற்றவர்களாக உயர்த்தும் நமது இலக்கு பணியில் தற்போது **2,90,628 மகளிரை** ஒருங்கிணைத்துள்ளோம். இவர்கள் கடந்த ஓராண்டில் **ரூ.1615.37 கோடியை** கடன் சுழற்சி செய்து தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி கொண்டுள்ளனர். மேலும் **ரூ.1341.24 கோடியை** சேமித்து தங்கள் குழுக்களின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்தியுள்ளனர்.

உள்ளே



4 ஐ. வி. டி. பி. நிறுவனர் தினவிழா



7 ஐ. வி. டி. பி. இலாபப் பங்கீடு



9 வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி

ஐ.வி.டி.பி வழக்கமாக மேற்கொள்ளும் கல்விப் பணிகள் மற்றும் நலப்பணிகளை இவ்வாண்டும் தொடர்ந்து மேற்கொண்டு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு கல்வி உதவியாகவும் ஏனைய கல்விப் பணிகளுக்காகவும் **ரூ.3.62 கோடியை** செலவிட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த ஓராண்டாக கார்கினோஸ் நிறுவனத்தோடு இணைந்து, ஐ.வி.டி.பி மேற்கொண்ட மார்பகம், கர்ப்பப்பை மற்றும் கருப்பை வாய் புற்றுநோய்களை கண்டறியும் பரிசோதனைக்காக **ரூ.1.6 கோடியும்,** பிரச்சனை இருப்பதாக கண்டறியப்பட்ட மகளிருக்கு, பெங்களுரு **செயின்ட் ஜான்ஸ்** மருத்துவமனையில் இலவச புற்றுநோய் உயர் சிகிச்சை வழங்குவதற்காக **ரூ.1 கோடி** என மொத்தம் **ரூ.2.6 கோடியை** செலவிட்டு, நம் உறுப்பினர்களின் உயிர்காக்கும் உன்னத பணியை மேற்கொண்டுள்ளோம். மேலும் இதர நலப்பணிக்களுக்காக **ரூ.9.4 கோடி** வழங்கியுள்ளோம் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐ.வி.டி.பி நிறுவனம், பெங்களுர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்து, ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த **1 இலட்சம் மகளிருக்கு** ஆரம்ப நிலை புற்றுநோய் பரிசோதனைகளை மேற்கொண்டு, ஐ.வி.டி.பி யின் நிதியில் அவர்களுக்கு இலவச சிகிச்சை வழங்க இலக்கு நிர்ணயம் செய்து அதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இவ்வாண்டு உங்கள் குழந்தைகள் தங்கள் தேர்வுகளை எழுதி முடித்து, அடுத்த நிலைக்குச் செல்ல தயாராகிக் கொண்டு இருப்பார்கள் என நம்புகிறேன். எனவே உங்கள் குழந்தைகளின் கல்வியில் கவனம் செலுத்துங்கள். உங்களின் ஒரு குழந்தை கூட கல்வியை இடையில் நிறுத்தவோ, இளம் வயது திருமணம் செய்வதையோ அனுமதிக்காதீர்கள். அவர்கள் உயர்கல்வி பயில்வதை உறுதி செய்யுங்கள். ஏனெனில் கல்வியே அழியாத செல்வம். கல்விக்கு செலவிடுவதே நீங்கள் செய்யும் சிறந்த முதலீடு ஆகும்.

நிறைவாக நீங்கள் அனைவரும் குழுக்களின் செயல்பாடுகளில் கவனம் செலுத்துங்கள். குழுக்களின் அனைத்து செயல்பாடுகளும் சிறப்பாக இருந்தால் மட்டுமே குழு அதன் முழு தர நிலையை எட்ட முடியும். பணியில் நேர்மையும், உண்மையும் உழைப்பும் இருந்தால் மட்டுமே நம் குழுக்கள் சிறக்கும். இது குழுக்களுக்கு மட்டுமல்ல நமது தனிப்பட்ட வாழ்வுக்கும் பொருந்தும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

*நன்றி*

*என்றும் உங்களில் ஒருவனாக*

**குழந்தை பிரான்சிஸ்**

நிறுவனர் – தலைவர்

## உள்ளே





15 ஐ. வி. டி. பி. யின் கல்விப் பணிகள்



21 ஐ. வி. டி. பி. யின் கல்வி உதவிகள்



29 ஐ. வி. டி. பி. யின் சமூகப் பணிகள்




# ஐ.வி.டி.பி யின் 77 வது நிறுவனர் தின விழா

**13.36 இலட்சம்**

**"முதலாய் வந்தவர் முயல் என்றால் முயன்று வந்தவர் புயல்'** என்ற வகையில் தன்னுடைய கடின உழைப்பின் மூலம் ஐ.வி.டி.பி நிறுவனத்தை இன்று ஆலமரமாக தலைத்தோங்க செய்திருக்கும் நிறுவனரை பெருமைப்படுத்தும் பொருட்டு, ஐ.வி.டி.பி யில் **77 வது** நிறுவனர் தின விழா கொண்டாடப்பட்டது. அப்போது ஐ.வி.டி.பி பணியாளர்களில் சிறப்பான முறையில் பணியாற்றியவர்களுக்கு **ரூ. 5.36 இலட்சம்** ஊக்கப்பரிசு மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் **ரூ. 2.60 இலட்சம்** மதிப்பில் பி ஜி நாயுடு கேக் & **ரூ. 1.40 இலட்சம்** மதிப்பில் பிரியாணியும் வழங்கப்பட்டது.



ஐ.வி.டி.பி பணியாளர்களில் தங்கள் கணவரை இழந்த வெள்ளிச்சந்தை கிளை அலுவலகப் பொறுப்பாளர் **திருமதி. மலர்** மற்றும் வரட்டனப்பள்ளி கிளை களப்பணியாளர் **திருமதி. சந்திரா** ஆகிய இருவருக்கும் தலா ரூ.2 இலட்சம் என மொத்தம் **ரூ. 4 இலட்சத்தை** சிறப்பு பரிசாக வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனர்.



## விதவை உறுப்பினர்களின் **338 குழந்தைகளுக்கு** கல்வி உதவித்தொகை மற்றும் புத்தகப் பைகள்

₹ **45.46** இலட்சம்

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், ஐ.வி.டி.பி உறுப்பினர்களில் கணவரை இழந்து மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் உறுப்பினர்களுக்காக இக்கல்வி உதவித்தொகை திட்டத்தை நடைமுறைபடுத்தியுள்ளது.



25.02.2024 அன்று நடைபெற்ற உதவித்தொகை வழங்கும் விழாவிற்கு பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரியின் இயக்குனர் **அருட்பணி யேசுதாஸ் ராஜமாணிக்கம்** அவர்கள் தலைமையேற்க, ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களிலுள்ள விதவை உறுப்பினர்களின் **338** குழந்தைகளுக்கு தலா ரூ.12,500/- என மொத்தம் **ரூ.42.25 இலட்சம்** கல்வி உதவித்தொகை, மற்றும் தலா ரூ.950/- என மொத்தம் **ரூ.3.21 இலட்சம்** மதிப்பிலான புத்தகப் பைகளையும் வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர். வழங்கப்பட்ட உதவியின் மொத்த மதிப்பு **ரூ.45.46 இலட்சம்** ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகை **ரூ.2.87** கோடி

## ஐ.வி.டி.பி பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை

₹ **30.07** இலட்சம்

- ஐ.வி.டி.பி கூட்டமைப்பு பணியாளர்களில் 3 வருடங்கள் தொடர்ந்து பணியாற்றிவரும் **164** பணியாளர்களின் **289** குழந்தைகளுக்கு **ரூ.29.47 இலட்சம்** கல்வி உதவித்தொகை

- ஐ.வி.டி.பி பணியாளர்களின் குழந்தைகளில் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற சாந்தி எனும் பணியாளரின் மகள் சந்தியாவிற்கு **ரூ.37,913/-** மதிப்பில் மடிக்கணினி, 10 ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற ராமி எனும் பணியாளரின் மகள் தீபிகாவிற்கு **ரூ.22,552/-** மதிப்பில் **4 கிராம் தங்க நாணய** விருது

இதுவரை இத்திட்டத்தின் கீழ் ஐ.வி.டி.பி பணியாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகை **ரூ.1.54 கோடி**







## 65வது
# இராமன் மகசேசே விருது வழங்கும் விழாவில்
## ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்

2012 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் அரசு வழங்கிய உயரிய விருதான இராமன் மகசேசே விருதைப் பெற்ற ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இவ்வாண்டு நடைபெற்ற **65 வது ஆண்டு இராமன் மகசேசே விருது** வழங்கும் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். விருது வழங்கும் அமைப்பின் அழைப்பை ஏற்று பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலாவில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட ஐ.வி.டி.பி நிறுவனர் **திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள், அடுத்து நடைபெற்ற இராமன் மகசேசே விருது பெற்றவர்களின் சிறப்பை விவரிக்கும் **"Greatness of Spirit"** எனும் புத்தக வெளியீட்டு விழாவிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களின் 2023 ஆம் ஆண்டிற்கான

₹ 102.7 கோடி

# இலாபப் பங்கீடு

ஐ.வி.டி.பி நிறுவனத்தின் கீழ் **16,146** மகளிர் சுய உதவிக் குழுக்களும் அதில் **2,90,628** உறுப்பினர்களும் உள்ளனர். அவர்களின் மொத்த சேமிப்பு **ரூ. 1341.24 கோடியாகும்.** ஒவ்வொரு உறுப்பினரும் தங்களின் குழுவில் குறிப்பிட்ட தொகையினை சேமித்து அந்த சேமிப்பு தொகையை குறைந்த வட்டியில் உள்கடனாக பெற்று பயனடைந்து வருகின்றனர். அவ்வாறு அவர்கள் பெரும் கடனுக்கு செலுத்தும் வட்டியானது குறிப்பிட்ட கால இடைவெளியில் உறுப்பினர்களின் சேமிப்பிற்கேற்ப இலாபமாக பங்கிடப்படுகிறது. இதுவே இலாபப் பங்கீடு ஆகும்.



இந்த இலாபப் பங்கீட்டு தொகையுடன் உறுப்பினர்கள் கட்டிய உபரி சேமிப்பும் வழங்கப்படுகிறது. இவ்வருடம் 5831 குழுக்களில் இருந்து உறுப்பினர்கள் பெற்ற இலாபப் பங்கீடு **ரூ. 102.7 கோடி,** உபரி சேமிப்பு **ரூ.142.2 கோடி** என மொத்தம் **ரூ.244.9 கோடி** இந்த வருடம் உறுப்பினர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது..

**ஐ.வி.டி.பி உறுப்பினர்கள் இதுவரை பெற்ற மொத்த இலாபப் பங்கீடு ₹ 919 கோடி**

## ஐ.வி.டி.பி யில் தீபாவளி திருவிழா

₹ 18.45 இலட்சம்



தீமை எனும் இருள் நீங்கி, நன்மை எனும் ஒளி பரவ, பாரம்பரியச் சிறப்புடன் தீப ஒளி திருவிழாவை ஐ.வி.டி.பி யின் **507** பணியாளர்களும் கொண்டாடும் வகையில், **ரூ.10.80 இலட்சம்** மதிப்பில் ஊக்கப்பரிசும், **ரூ.7.65 இலட்சம்** மதிப்பில் இனிப்புகளும் வழங்கி தனது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர். இவ்வாண்டு வழங்கப்பட்ட தீபாவளி பரிசுகளின் மொத்த மதிப்பு **ரூ.18.45 இலட்சம்.**

## ஐ.வி.டி.பி பணியாளர்களுக்கு பொங்கல் பரிசு

₹ 6.79 இலட்சம்



தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் ஆண்டுதோறும் தனது பணியாளர்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இந்த வருடமும் பொங்கல் விழாவின் போது **507** பணியாளர்களுக்கு தலா **ரூ.1340/-** என மொத்தம் **ரூ.6.79 இலட்சம்** மதிப்பிலான பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

## மறைந்த ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு

# வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி

₹ **7.14** கோடி




மகளிர் மேம்பாட்டிற்காக செயல்பட்டு வரும் ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், அதன் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருவது அனைவரும் அறிந்த ஒன்று. அவற்றுள் முதன்மையானது வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி திட்டமாகும். இத்திட்டத்தின்படி பல்வேறு காரணங்களால் எதிர்பாராமல் மரணமடையும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கும், விபத்தினால் நிரந்தர உடல் ஊனமுற்றோருக்கும் வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும் உறுப்பினர்கள் மரணமடையும் போது அவர்களின் ஈமச் சடங்கிற்காக **அந்த குழு உறுப்பினர்களின் மூலம் ரூ.5000/-** உடனடியாக வழங்கப்படுகிறது.

அதன்படி 11.02.2024 அன்று நடைபெற்ற நிகழ்வில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களிலிருந்து பல்வேறு காரணங்களினால் மரணமடைந்த **1301** உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா **ரூ.50,000/-**மும், நிரந்தர உடல் ஊனமுற்றோருக்கு தலா **ரூ.25,000/-**மும் என **ரூ.7.14 கோடி** வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டது.

மேலும் இவ்விழாவில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் மண்டல மேலாளர் திருமதி. **ஷோபா** அவர்களும், அகர்தலா ஆஷா தொண்டு நிறுவன நிர்வாகி அருட்பணி. **பாப்பி வளன்** அவர்களும் சிறப்பு விருந்தினர்களாய் கலந்துகொள்ள, அருட்பணி. **ஸ்டேன்லி** அஞ்சலி செய்தியை வழங்கினார்.

இத்திட்டம் துவங்கப்பட்ட 2001ஆம் ஆண்டு முதல் இதுவரை, மறைந்த **12109** உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு **ரூ.61.13 கோடியை** வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கியுள்ளது ஐ.வி.டி.பி நிறுவனம்.

# புற்றுநோய்க்கு பின்பும் வாழ்வு உண்டு

## ஐவிடிபியின் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டம்.



உலகளவில் இன்று பெண்களிடையே பொதுவாக காணப்படும் நோய்களில் முதன்மையானது கர்ப்பப்பை புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை வாய் புற்றுநோய்களே ஆகும். குறிப்பாக கிராமப் புறங்களில் வாழும் மகளிர் தங்கள் வாழ்நாளில் ஒருமுறை கூட, தங்கள் உடலில் புற்றுநோய்க்கான அறிகுறிகள் உள்ளதா என்பதை அறிந்திருக்கவில்லை என்பது மிகவும் சோகமான நிகழ்வு. இந்நிலையில் புற்றுநோய் அறிகுறிகள் உள்ள பெண்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள புற்றுநோய் முற்றிய நிலையில், உடலின் வேறு இடங்களுக்கும் பரவி இறுதியில் இறக்க நேரிடுகிறது.

மகளிரின் இந்த அவல நிலையைக் கண்ணுற்ற ஐவிடிபி நிறுவனத் தலைவர் திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்களின் எண்ண ஓட்டத்தில் உதித்ததே ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் மகளிர் நலவாழ்வு மருத்துவ முகாம்களை நடத்தி ஐவிடிபி சுய உதவிக்குழுக்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும், உலகத் தரத்திலான தொழில்நுட்பத்தில் புற்று நோய் பரிசோதனைகளை மேற்கொள்ளும் திட்டமாகும். இதற்கென மும்பையைச் சேர்ந்த கார்கினோஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்க்கொண்டு ஓராண்டு நிறைவுற்ற நிலையில் **10,101 மகளிரை** இச்சோதனைக்கு உட்படுத்தி அவர்களில் **1043** பேருக்கு புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் இருப்பதாக கண்டறியப்பட்டது.

மேற்குறிப்பிட்ட துவக்கநிலை பரிசோதனை முகாம்களுக்காக **ரூ.1.60 கோடியும்,** அதைத்தொடர்ந்து கிருஷ்ணகிரி, **புனித லூயிஸ்** மருத்துவமனை மற்றும் பெங்களூரு, **செயின்ட் ஜான்ஸ்** மருத்துவமனையில் இலவச புற்றுநோய் உயர் சிகிச்சை வழங்கவும், பரிசோதனை முகாம்கள் நடத்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், இரத்த தான முகாம் ஏற்பாடுகள், பரிசோதனை மற்றும் சிகிச்சை பெறும் உறுப்பினர்களின் தரவுகளை பராமரிக்க கணினி மென்பொருள் உருவாக்குதல் மற்றும் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ள ஐ.வி.டி.பி நிதியிலிருந்து **ரூ. 1 கோடி** என மொத்தம் இத்திட்டத்திற்க்காக **ரூ. 2.60 கோடி** இவ்வாண்டில் செலவிடப்பட்டுள்ளது.

## இவ்வாறு அனைத்து நிலைகளிலும் சிகிச்சை பெற்றோர் விவரம்:

இதுவரை ஆரம்பநிலை புற்றுநோய் பரிசோதனை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை : 10,101

HPV POSITIVE கண்றியப்பட்டவர்கள் எண்ணிக்கை : 1043

COLOPSCOPY சிகிச்சை மேற்க்கொண்டோர் : 965

HYSTECTOMY (கர்ப்பப்பை அகற்றுதல்) சிகிச்சைப் பெற்றோர் : 26

THERMAL ABLATION, CONE BIOPSY சிகிச்சைப் பெற்றவர்கள் : 93

மார்பக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் : 504

மார்பக Mammogram,FNAC பரிசோதனை மேற்க்கொண்டோர் : 230

மார்பக புற்றுநோய் அறுவைசிகிச்சை மேற்கொண்டோர் : 15

கதிரியக்க & கீமோதெரபி (Chemotherapy) சிகிச்சைப் பெற்றோர் : 13

PET SCAN எடுத்தவர்கள் : 12

GENITIC TEST மேற்க்கொண்டோர் : 03

புற்றுநோய் அல்லாத பொது சிகிச்சை பெற்றோர் : 29

ஐ.வி.டி.பியின் அடுத்த **5 ஆண்டு இலக்கு** 1,00,000 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு HPV புற்றுநோய் பரிசோதனைகளை மேற்க்கொள்வது.

### புற்றுநோய் பரிசோதனை மேற்க்கொள்ள பெங்களூரு செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கிருஷ்ணகிரி, புனித லூயிஸ் மருத்துவமனையோடு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம்

அடுத்த ஓராண்டிற்கு HPV ஆரம்ப நிலை புற்றுநோய் பரிசோதனை, மார்பகப் புற்றுநோய் பரிசோதனை மற்றும் இதர மகளிர் நலன் தொடர்பான பிரச்சனைகளை கண்டறிந்து அடுத்த கட்ட உயர் சிகிச்சையளிக்கும் திட்டத்தை முன்னெடுக்கும் வகையில், கடந்த 17.02.2024 அன்று ஐ.வி.டி.பி நிறுவனம் பெங்களூரு செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கிருஷ்ணகிரி செயின்ட் லூயிஸ் மருத்துவமனை ஆகிய நிறுவனங்களோடு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.



ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான புற்றுநோய் கண்டறியும் மருத்துவப் பரிசோதனையின் மூலம், உயர்சிகிச்சை பெறும் உறுப்பினர்களின் சிகிச்சைக்கு தேவையான இரத்தத்தை வழங்க, திருப்பத்தூர், தூய நெஞ்சக் கல்லூரியைச் சார்ந்த 20 மாணவர்களும், தருமபுரி, தொன் போஸ்கோ கலைக் கல்லூரியைச் சார்ந்த 36 மாணவர்களும் தாமாக முன்வந்து ரத்ததானம் செய்தனர். அவர்களைப் பாராட்டும் வகையில் தலா ரூ.950/- என ரூ.53 ஆயிரம் மதிப்பிலான புத்தகப் பைகளை வழங்கி ஊக்கப்படுத்தினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு
2023 – 2024 ஆம் ஆண்டிற்கு
**நிர்ணயித்த கடன் இலக்கு**

₹ **1815** கோடி

ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்கள்
2023 – 2024 ஆம் ஆண்டில்
**அடைந்த கடன் இலக்கு**

₹ **1615.37** கோடி

2023–2024 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராம வங்கிகளுடனான செயல் திட்டக் கூட்டம் 14.09.2023 அன்று ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு கிராம வங்கிக்கான கூட்டத்திற்கு வங்கியின் பொது மேலாளர் **திரு.தாமோதிரன்** அவர்கள் முன்னிலை வகிக்க, கிருஷ்ணகிரி மண்டல மேலாளர் **திருமதி. ஹேமலதா** அவர்களும், ஐ.வி.டி.பி குழுக்கள் செயல்படும் இடங்களில் உள்ள வங்கிக் கிளை மேலாளர்களும் கலந்து கொண்டு **8888** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு **ரூ.750 கோடி** வங்கிக்கடன் வழங்க இலக்கு நிர்ணயித்தனர்.



20.09.2023 அன்று இந்தியன் வங்கி மேலாளர்களுடன் நடைபெற்ற செயல் திட்டக் கூட்டத்திற்கு இந்தியன் வங்கியின் தருமபுரி மண்டல மேலாளர் திருமதி. பத்மாவதி அவர்களும், வேலூர் மண்டல மேலாளர் திரு. பிரசன்னகுமார் அவர்களும், முன்னிலை வகிக்க, ஐ.வி.டி.பி குழுக்கள் செயல்படும் இடங்களில் உள்ள வங்கிக் கிளை மேலாளர்களும் கலந்து கொண்டு **4431** ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு **ரூ.375 கோடி வங்கிக்கடன்** வழங்க இலக்கு நிர்ணயித்தனர்.

மேலும் பேங்க் ஆப் இந்தியா வங்கியோடு இணைந்து செயல்படும் **378** ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களுக்கு **ரூ.40 கோடியும்,** பேங்க் ஆப் பரோடா வங்கியோடு இணைந்து செயல்படும் **966** ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களுக்கு **ரூ.75 கோடியும்,** யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியோடு இணைந்து செயல்படும் **594** ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களுக்கு **ரூ.55 கோடியும்,** ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியோடு இணைந்து **360** ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களுக்கு **ரூ.35 கோடியும்,** வங்கிக்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இவ்வாண்டிற்கான மொத்த வங்கிக் கடன் இலக்கு **ரூ.1330 கோடியாகும்.** அது தவிர குழுக்கடன் மற்றும் சுகாதாரத் திட்டங்களுக்கான கடனாக **ரூ.430 கோடியும்,** ஐ.வி.டி.பி கடனாக **ரூ.55 கோடியும்** என ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களுக்கு 2023–2024 ஆண்டிற்கு **ரூ.1815 கோடி** கடன் வழங்க இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் இந்த வருடத்தில் வங்கிக் கடனாக **ரூ.1218.67 கோடி,** சங்கக் கடன் & சுகாதாரக்கடனாக **ரூ.335.07 கோடி,** ஐ.வி.டி.பி கடனாக ரூ.61 கோடி என மொத்தம் **ரூ.1615.37 கோடி** வழங்கப்பட்டது.

₹ 1.25 இலட்சம்

## ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு

# தீ விபத்து நிதியுதவி

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வீடுகள் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு அவர்கள் தங்கள் வீடு மற்றும் உடைமைகளை இழக்க நேரிடும் போது **ரூ.25000/-** தீ விபத்து நிவாரண உதவியாக வழங்கப்பட்டு வருகிறது

அவ்வகையில் இவ்வாண்டு தீ விபத்தின் மூலம் தங்களது உடைமைகளை இழந்த 5 உறுப்பினர்களுக்கு தலா **ரூ.25000/-** என மொத்தம் **ரூ.1.25 இலட்சத்தை** வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

### தீ விபத்து நிதியுதவி பெற்றோரின் விவரம்

1.போச்சம்பள்ளி கிளை - பேரரசி ம/ம - சத்தி சின்ராஜ்
2.போச்சம்பள்ளி கிளை - செம்மலர் ம/ம - சத்தியவாணி பிரகாஷ்
3.மாதேப்பட்டி கிளை - தேவதை ம/ம - தாயம்மாள் ராமமூர்த்தி
4.பர்கூர் கிளை - ராசி ம/ம - கண்ணம்மாள்
5.பாரூர் கிளை - ஜனனி ம/ம - செல்வி

## பணியாளர்களுக்கான இதர உதவிகள்

₹ 15.1 இலட்சம்



இவ்வாண்டு பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் இறக்க நேரிடும் போது அவர்களின் ஈமச்சடங்கு மற்றும் உதவி நிதியாக **ரூ.1.9 இலட்சமும்,** கணவரால் கைவிடப்பட்ட பணியாளர்களுக்கு **ரூ.2 இலட்சமும்,** பெண் குழந்தைகள் திருமண உதவியாக **ரூ.3.50 இலட்சமும்,** மற்றும் அவர்களுக்கான மருத்துவச் செலவு, சீருடை, சுகாதாரப் பொருட்கள் வழங்கியது என மொத்தம் **ரூ.15.1 இலட்சம் மதிப்பிலான உதவிகள்** பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.




## திரிபுரா ஜஸ்ட் நிறுவனத்தின்
## சுய உதவிக் குழுக்களுக்கு
# பாக்கு மட்டை தட்டு தயாரிக்கும் இயந்திரம்

ஐ.வி.டி.பி நிறுவனம், திரிபுரா மாநிலம், அகர்தலா ஜஸ்ட் நிறுவனத்தின் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி பயனடையும் வகையில் **ரூ.3.86 இலட்சம்** மதிப்பிலான பாக்கு மட்டை தட்டுகள் தயாரிக்கும் இயந்திரத்தை வழங்கி உதவியது.

## அருணாச்சலப் பிரதேசம் ஆஷா சமூக பணி மையத்திற்கு
# தையல் இயந்திரங்கள் & உபகரணங்கள்

2.50
இலட்சம்




அருணாச்சலப் பிரதேசம், ஆஷா சமூக பணி மையை சுய உதவிக்குழு உறுப்பினர்கள், தங்களின் தனித்திறனை வளர்த்துக் கொண்டு, வாழ்வில் முன்னேற்றம் அடையும் வகையில், அவ்வமைப்பிற்கு **ரூ.2.50 இலட்சம்** மதிப்பிலான **தையல் இயந்திரங்கள்** மற்றும் உபகரணங்களை ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கி உதவினார்.




# ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கு 9 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம்

**கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி மெட்ரிக் பள்ளியில் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய குழந்தைகள் படிப்பதால், அக்குழந்தைகளுக்கு தேவையான பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் கல்வி உதவித்தொகை என பல கல்வி உதவிகளை ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.**

ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளி இதுவரை 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை இயங்கும் மெட்ரிக் பள்ளியாக செயல்பட்டு வந்த நிலையில். தற்போது தரம் உயர்த்தப்பட்டு 12 ஆம் வகுப்பு வரை இயங்கும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியாக செயல்பட்டு வருகின்றது. ஆகவே மாணவர்களின் நலன் கருதி, மேல்நிலை வகுப்பிற்கு தேவையான **9 வகுப்பறைகள்** கொண்ட கட்டிடம் மற்றும் மேடையை **ரூ. 1.08 கோடி** மதிப்பில் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் அவர்கள் கட்டி வழங்கி கடந்த **09.03.2024** அன்று புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார்.





## பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு

## 15 INTERACTIVE DISPLAY BOARD

- ஒசூர் செயின்ட் ஜோசப் மகளிர் கல்லூரிக்கு
  4 INTERACTIVE BOARD ரூ.4.40 இலட்சம்
- மெட்டாலா, இலயோலா கல்லூரிக்கு
  6 INTERACTIVE BOARD ரூ.6.60 இலட்சம்
- மதுரை அக்சீலியம் மகளிர் கல்லூரிக்கு
  2 INTERACTIVE BOARD ரூ.2.20 இலட்சம்
- காவேரிப்பட்டிணம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு
  2 INTERACTIVE BOARD ரூ.2.20 இலட்சம்
- பாகலூர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு
  1 INTERACTIVE BOARD ரூ.1.10 இலட்சம்

₹ 16.5 இலட்சம்




# ₹ 5 இலட்சம்

## அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு 16 ஸ்மார்ட் டிவி

அரசுப் பள்ளிகளில் மாணவ மாணவியரின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் சென்ற ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளிகளுக்கு **ரூ.66 இலட்சம்** மதிப்பிலான **211** ஸ்மார்ட் டிவிக்களை வழங்கிய நிலையில், தற்போது

- அரசுப் பள்ளிகளுக்கு **ரூ.2.2 இலட்சம்** மதிப்பில் **7 ஸ்மார்ட் டிவிக்கள்**
- திருப்பத்தூர், தோமினிக் சாவியோ பள்ளிக்கு **ரூ. 2.2 இலட்சம்** மதிப்பில் **7 ஸ்மார்ட் டிவிக்கள்**
- அரூர், புதுவாழ்வு சிறுவர் இல்லத்திற்கு **ரூ. 31 ஆயிரம்** மதிப்பில் **1 ஸ்மார்ட் டிவி**
- அரூர், புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளிக்கு **ரூ. 31 ஆயிரம்** மதிப்பில் **1 ஸ்மார்ட் டிவி**

## பெற்றோரை இழந்த மற்றும் ஏழ்மை நிலையில் வாழும் 1483 கல்லூரி மாணவ மாணவியருக்கு

₹ 1.33 கோடி

# கல்வி உதவித் தொகை மற்றும் புத்தகப் பைகள்

ஐ.வி.டி.பி நிறுவனம் ஏழை, எளிய மாணவர்களை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லும் நோக்கில் பெற்றோர் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவர்களுக்கும் **ரூ.7,500/-** முதல் **ரூ.15,000/-** வரை கல்வி உதவித்தொகை வழங்கி வருவதோடு, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தலா **ரூ.7500/-** சிறப்பு கல்வி உதவித்தொகையாக வழங்கி வருகிறது.

அதன்படி உயர் கல்வி உதவித்தொகையாக மொத்தம் **ரூ.1.19 கோடி** ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கியுள்ளது. அத்தோடு கல்வி உதவித்தொகை பெற்ற **1483** மாணவ மாணவியருக்கு தலா **ரூ.950/-** என மொத்தம் **ரூ.13.70 இலட்சம்** மதிப்பிலான புத்தகப் பைகளையும் வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

**இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 1.33 கோடியாகும்.**




- திருப்பூர் செயின்ட் ஜோசப் கல்லூரியின் **100 மாணவியருக்கு ரூ.7.55 இலட்சம்**
- வேலூர் அக்சீலியம் கல்லூரியின் **108 மாணவியருக்கு ரூ.8.22 இலட்சம்**
- ஒசூர் செயின்ட் ஜோசப் கல்லூரியின் **81 மாணவியருக்கு ரூ.6.22 இலட்சம்**
- மெட்டாலா, இலயோலா கல்லூரியின் **46 மாணவ மாணவியருக்கு ரூ.3.55 இலட்சம்**
- ஏலகிரி, தொன் போஸ்கோ கல்லூரியின் **47 மாணவர்களுக்கு ரூ.3.57 இலட்சம்**
- சேலம், பாகல்பட்டி, செயிண்ட் ஜோசப் கல்லூரியின் **50 மாணவர்களுக்கு ரூ.3.77 இலட்சம்**
- சேலம், ஜெயராணி கல்லூரியின் **16 மாணவியருக்கு ரூ.1.22 இலட்சம்**
- சேலம், தூய மரியன்னை சமுதாய கல்லூரியின் **15 மாணவியருக்கு ரூ.1.50 இலட்சம்**

- வேட்டவலம், இலயோலா கல்லூரியின் **189 மாணவ மாணவியருக்கு ரூ.14.17 இலட்சம்**
- எலத்தகிரி, கொன்சாகா கல்லூரியின் **103 மாணவியருக்கு ரூ.7.97 இலட்சம்**
- தருமபுரி, தொன் போஸ்கோ கலை கல்லூரியின் **97 மாணவர்களுக்கு ரூ.8.80 இலட்சம்**
- தருமபுரி, தொன் போஸ்கோ கல்வியியல் கல்லூரியின் **6 மாணவ மாணவியருக்கு ரூ.60 ஆயிரம்**
- சேலம், செயின்ட் ஜோசப் தொழுநோய் நிவாரண மையத்தின் **6 மாணவர்களுக்கு ரூ.60 ஆயிரம்**
- தூத்துக்குடி, கீழ ஈரால் , தொன் போஸ்கோ கலை கல்லூரியின் **69 மாணவர்களுக்கு ரூ.5.27 இலட்சம்**
- மதுரை அக்சீலியம் கல்லூரியின் **40 மாணவர்களுக்கு ரூ.3.55 இலட்சம்**
- நாமக்கல், வெப்படை, பான் செக்கர்ஸ் கல்லூரியின் **37 மாணவியருக்கு ரூ.2.97 இலட்சம்**
- திருப்பத்தூர், தூய நெஞ்சக் கல்லூரியின் **233 மாணவ மாணவியருக்கு ரூ.16.69 இலட்சம்**
- கிருஷ்ணகிரி,செயின்ட் லூயிஸ் செவிலியர் பயிற்சிப்பள்ளியின் **11 மாணவியருக்கு ரூ.1.10 இலட்சம்**
- கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியின் **109 மாணவர்களுக்கு ரூ.7.88 இலட்சம்**
- கிருஷ்ணகிரி அரசு மகளிர் கல்லூரியின் **10 மாணவியருக்கு ரூ.1 இலட்சம்**
- பர்கூர் செயின்ட் ஜோசப் உடல் மற்றும் சமூக நல மையத்தின் **53 மாணவர்களுக்கு ரூ.5.30 இலட்சம்**
- ஒசூர், கெலவரப்பள்ளி இலங்கை அகதிகள் முகாமில் **17 மாணவர்களுக்கு ரூ.1.70 இலட்சம்.**
- பிற கல்லூரிகளைச் சேர்ந்த **40 மாணவர்களுக்கு ரூ.6.40 இலட்சம்.**




**ஐ.வி.டி.பி நிறுவனம் இதுவரை இத்திட்டத்தின் மூலம் வழங்கிய கல்வி உதவித் தொகை**

**ரூ. 7.16 கோடியாகும்.**

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி யின்

# "வெற்றி நம் கையில்" இலவச வினா விடை கையேடு

₹ 13.45 இலட்சம்

நமது ஐ.வி.டி.பி நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் சிறப்புடன் கல்வி பயிலவும், நம்பிக்கையோடு தங்களது 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வை எதிர்கொள்ளவும், மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கவும் சிறந்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு தமிழ், ஆங்கிலம் மற்றும் தெலுங்கு வழியில் **"வெற்றி நம் கையில்"** எனும் வினா விடை தொகுப்பு நூலைத் தயாரித்து அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் இலவசமாக வழங்கி வருகிறது.



அவ்வகையில் இவ்வாண்டும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்காக தமிழ் வழியில் **11000** வினா விடை கையேடு மற்றும் ஆங்கில வழியில் **9000** வினா விடை கையேடு என **ரூ.13.45 இலட்சம்** மதிப்பில் ஐ.வி.டி.பி நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட **"வெற்றி நம் கையில்"** வினா விடை கையேடுகளை ஐ.வி.டி.பி நிறுவனர் தலைமையில் கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி . **கே.பி மகேஸ்வரி** அவர்கள் வெளியிட்டார். பின் அக்கையேடு அனைத்து பள்ளி மாணவ மாணவியருக்கும் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

**இதுவரை வெற்றி நம் கையில் வினா விடை கையேட்டிற்காக ஐ.வி.டி.பி செலவிட்ட தொகை ரூ.4.25 கோடி**

# ஜுடோ மாணவர்களுக்கு சீருடை

₹ 1.58 இலட்சம்

கிருஷ்ணகிரி விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ஜுடோ விளையாட்டு பயிற்சி பெறும் **30** மாணவர்களுக்கு **ரூ. 1.58 இலட்சம்** மதிப்பிலான விளையாட்டு சீருடைகளை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

# கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு கல்வி உதவிகள்

₹ 20.59 இலட்சம்



ஐ.வி.டி.பி கடந்த கல்வியாண்டில் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரியின் பயன்பாட்டிற்காக **ரூ. 1 கோடி** மதிப்பில் கட்டப்பட்ட **5 வகுப்பறைகள்** கொண்ட கட்டிடத்திற்கு தனது பங்களிப்பாக **ரூ.50 இலட்சம்** வழங்கியது.

தற்போது 16.02.2024 அன்று நடைபெற்ற அக்கட்டிடத்தின் திறப்பு விழாவினை முன்னிட்டு, விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்ட ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே **திரு.குழந்தை பிரான்சிஸ்** அவர்கள், அக்கட்டிடத்திற்கு தேவையான **ரூ.6.25 இலட்சம்** மதிப்பில் 100 நாற்காலிகள், **ரூ.4.30 இலட்சம்** மதிப்பில் 45 டெஸ்க் பென்சுகள், **ரூ.12800/-** மதிப்பில் அலமாரிகள், **ரூ.40000/-** மதிப்பில் கீரின்போர்டுகள், **ரூ.62000/-** மதிப்பில் ஒலியமைப்பு கருவி என மொத்தம் **ரூ.11.70 இலட்சம்** மதிப்பிலான தளவாடப் பொருட்களை வழங்கினார்.

மேலும் மாணவியருக்கு பயனளிக்கும் வகையில் **851** மாணவியருக்கு தலா **ரூ.695/-**என மொத்தம் **ரூ.5.02 இலட்சம்** மதிப்பில் சீருடைகள், **ரூ.1.09 இலட்சம்** மதிப்பில் **LED** திரை, **11** மாணவியருக்கு **ரூ.1.18 இலட்சம்** மதிப்பில் கல்வி உதவித்தொகை மற்றும் புத்தகப்பைகள் மற்றும் அனைத்து மாணவியருக்கும் **ரூ.1.60 இலட்சம்** மதிப்பில் கேக்குகளையும் வழங்கி உதவினார். வழங்கப்பட்ட கல்வி உதவியின் மொத்த மதிப்பு **ரூ.20.59 இலட்சம்** ஆகும்.

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் இதுவரை இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், மாணவிகளின் நலனுக்காகவும் **ரூ.1.40 கோடி** மதிப்பிலான பல்வேறு கல்விச் சேவைகளை வழங்கியுள்ளது.




## அக்சீலியம் கல்லூரிக்கு வெளிப்புற LED திரை

நமது ஐ.வி.டி.பி நிறுவனம், வேலூர் அக்சீலியம் கல்லூரியில் பயிலும் மாணவிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அக்கல்லூரிக்கு **ரூ.10 இலட்சம்** மதிப்பிலான வெளிப்புற **LED** திரையை வழங்கியது. இதில் ஐ.விடி.பி–யின் பங்களிப்பாக வெளிப்புற **LED** திரைக்கு **ரூ.5 இலட்சத்தை** ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் அவர்கள் வழங்கினார்.

ஐ.வி.டி.பி இதுவரை இக்கல்லூரிக்கு வழங்கிய கல்வி உதவிகளின் மதிப்பு **ரூ.1.57 கோடி**

## ஏலகிரி தொன் போஸ்கோ கல்லூரியின் சமையல் கூடத்திற்கு நவீன உபகரணம்

₹ 3.40 இலட்சம்



ஏலகிரி தொன் போஸ்கோ கல்லூரியின் விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்காக, சமையல் கூடத்தில் விரைவாக உணவு சமைக்க **ரூ. 6.81 இலட்சம்** மதிப்பிலான தானியங்கி சப்பாத்தி தயாரிக்கும் இயந்திரம் நிறுவப்பட்டது. இதில் ஐ.வி.டி.பி பங்களிப்பாக **ரூ. 3.40 இலட்சத்தை** ஐ.வி.டி.பி தலைவர் வழங்கி, இயந்திரத்தை துவங்கி வைத்தார்.

ஐ.வி.டி.பி இதுவரை இக்கல்லூரிக்கு வழங்கிய கல்வி உதவிகளின் மதிப்பு **ரூ. 78 இலட்சம்**

## கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு **புத்தகப் பைகள்**

**₹ 1.1 இலட்சம்**




கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்ட ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர், விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் மாநில அளவில் சாதனைப் புரிந்த **108** மாணவியரைப் பாராட்டும் வகையில், தலா **ரூ.1000/-** என மொத்தம் **ரூ.1.1 இலட்சம்** மதிப்பிலான புத்தகப் பைகளை வழங்கி ஊக்கப்படுத்தினார்.

ஐ.வி.டி.பி இதுவரை இப்பள்ளிக்கு வழங்கிய கல்வி உதவிகளின் மதிப்பு **ரூ.40.23 இலட்சம்**

## திருப்பத்தூர் மேரி இம்மாகுலேட் பள்ளிக்கு **தையல் இயந்திரங்கள்**

**₹ 93 ஆயிரம்**



திருப்பத்தூர், மேரி இம்மாகுலேட் பள்ளியில் பயிலும் குழந்தைகளின் பெற்றோர்கள் பயன்பெறும் வகையில், அப்பள்ளிக்கு நமது ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பங்களிப்பாக **ரூ.93 ஆயிரம்** மதிப்பிலான **15** தையல் இயந்திரங்கள், பள்ளி நிர்வாகத்தின் பங்களிப்பாக **ரூ.93 ஆயிரம்** மதிப்பிலான **15** தையல் இயந்திரங்கள் என மொத்தம் **ரூ.1.86 இலட்சம்** மதிப்பிலான **30** தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது.

## கல்லூரி மாணவிகளுக்கு சீருடை

**₹ 6.47 இலட்சம்**



கிருஷ்ணகிரி மாவட்டம், காரிமங்கலம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவிகள் ஏற்றத் தாழ்வுகளின்றி, சமத்துவ மனப்பான்மையுடன் கல்லூரிக்கு வரும் பொருட்டு, இளங்கலை முதலாண்டு பயிலும் **640** மாணவிகளுக்கும் மற்றும் முதுகலை முதலாண்டு பயிலும் **100** மாணவிகளுக்கும் தலா **ரூ.695/-** என மொத்தம் **ரூ.5,14,300/-** மதிப்பிலான சீருடைகள்.

சேலம், பாகல்பட்டியில் இயங்கி வரும் செயின்ட் ஜோசப் கல்லூரி மாணவிகளின் நலன் கருதி, அங்கு பயிலும் 300 மாணவிகளுக்கு தலா **ரூ.445/-** என மொத்தம் **ரூ.1.33 இலட்சம்** மதிப்பிலான சீருடைகள்.

## பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டி தங்க நாணயங்கள்

**₹ 90 ஆயிரம்**

கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாணவர்களை 100 சதவீதம் மதிப்பெண் பெற வைத்த ஆசிரியர்களைப் பாராட்டும் வகையில் 10 ஆசிரியர்களுக்கும், ஒன்னல்வாடி செயின்ட் அகஸ்டின் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களில் அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்த 6 மாணவர்களுக்கும் தலா **ரூ.5630/-** என மொத்தம் **ரூ.90 ஆயிரம்** மதிப்பிலான தங்க நாணயங்களை வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.



₹ 2.29 இலட்சம்



# பள்ளி மாணவ மாணவியருக்கு நகவெட்டிகள் & வாட்டர் பாட்டில்கள்

பள்ளி மாணவ மாணவியரின் உடல் நலன் கருதியும், உடலுக்கு தீங்கிளைக்கும் குடிநீர் பாட்டில்களைத் தவிர்க்கும் வகையிலும், நகங்களை ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் பராமரிக்கவும் மற்றும் அவர்களை ஊக்கப்படுத்தவும் பல்வேறு நல உதவிகளை வழங்கி வருகிறது ஐ.வி.டி.பி நிறுவனம்.

கிருஷ்ணகிரி ஆர்.சி. பாத்திமா ஆண்கள் துவக்கப்பள்ளி மற்றும் உயர் நிலைப் பள்ளியின் **1760** மாணவர்களுக்கு **ரூ.86411/-** மதிப்பிலும், ஒன்னல்வாடி செயின்ட் அகஸ்டின் மேல்நிலைப் பள்ளியின் **1700** மாணவ மாணவியருக்கு **ரூ.81600/-** மதிப்பிலும், தருமபுரி மாவட்டம், உம்மியம்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியின் **360** மாணவ மாணவியருக்கு **ரூ.18,000/-** மதிப்பிலும் என மொத்தம் **ரூ.1.86 இலட்சம்** மதிப்பிலான நகவெட்டிகள்.

மேலும் தருமபுரி மாவட்டம், உம்மியம்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியின் 360 மாணவ மாணவியருக்கு ரூ.**43,200/-** மதிப்பிலான வாட்டர் பாட்டில்களையும் ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே திரு.**குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கி ஊக்கப்படுத்தினார்.

**ஊக்கப் பரிசுகளின் மொத்த மதிப்பு ரூ.2.29 இலட்சம் ஆகும்.**

## பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டி ஊக்கப் பரிசுகள்

**₹ 2.82 இலட்சம்**

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திலும், அவர்களை நன்னெறிப்படுத்தவும் அயராது உழைக்கும் பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டும் வகையில் ஆசிரியர் தின விழாவில் ஊக்கப்பரிசுகளை வழங்கியது.



- கிருஷ்ணகிரி மாவட்டம், ஒன்னல்வாடி செயின்ட் அகஸ்டின் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றும் 60 ஆசிரியர்களுக்கு தலா **ரூ.895/-** என மொத்தம் **ரூ.53700/-** மதிப்பிலான பிளாஸ்க்குகள்.
- கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் 60 ஆசிரியர்களுக்கு தலா **ரூ.3000/-** என மொத்தம் **ரூ.1.80 இலட்சம்** மதிப்பிலான **Storage Box**.
- கிருஷ்ணகிரி ஆர்.சி. பாத்திமா ஆண்கள் துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் 55 ஆசிரியர்களுக்கு தலா **ரூ.895/-** என மொத்தம் **ரூ.49225/-** மதிப்பிலான பிளாஸ்க்குகள்.

## கிருஷ்ணகிரி மாவட்ட அரசு பள்ளி மாணவர்களுக்கு உணவு மற்றும் வாட்டர் பாட்டில்கள்

**₹ 1.10 இலட்சம்**

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் கற்றல் திறனை மேம்படுத்துவதுடன், அவர்களை விளையாட்டுத்துறையிலும் சிறப்புடையவர்களாக திறன்படுத்தும் வகையில் மாணவர்களிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பெற்றது. அப்போது **2000** மாணவர்களுக்கு **ரூ.1.10 இலட்சம்** மதிப்பில் உணவு மற்றும் வாட்டர் பாட்டில்களை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.





₹ 6.00 இலட்சம்

# பள்ளி மாணவ மாணவியருக்கு கேக்குகள்

" இல்லாதவருக்கு அருள்வதே சிறப்பு. கொண்டாட்டங்கள் எல்லாம் பிறருக்கு கொடுத்து உதவுவதிலே நிறைவு பெறட்டும் "

என்ற வகையில் ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை பல்வேறு பள்ளி மாணவ மாணவிகளுடன் இனிப்புகளைப் பகிர்ந்து சிறப்பித்தது.

| | |
|---|---|
| கோட்டையூர் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்களுக்கு | ரூ.52 ஆயிரம் |
| கோசலை விருது விழாவில் 2100 மாணவர்கள் & பெற்றோருக்கு | ரூ.84 ஆயிரம் |
| கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் 2300 மாணவியருக்கு | ரூ.92 ஆயிரம் |
| கிருஷ்ணகிரி, புனித அன்னாள் நர்சரி மற்றும் துவக்கப் பள்ளியின் 1800 மாணவிகளுக்கு | ரூ.72 ஆயிரம் |
| கிருஷ்ணகிரி, ஆர்.சி.பாத்திமா ஆண்கள் துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியின் 1700 மாணவர்களுக்கு | ரூ.68 ஆயிரம் |
| தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம் உம்மியம்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியின் 360 மாணவ மாணவியருக்கு | ரூ.16 ஆயிரம் |
| ஒன்னல்வாடி, செயின்ட் அகஸ்டின் மேல்நிலைப் பள்ளியின் 1700 மாணவ மாணவியருக்கு | ரூ.66 ஆயிரம் |
| கிருஷ்ணகிரி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் 3100 மாணவிகளுக்கு | ரூ.1.5 இலட்சம் |

**இவற்றின் மொத்த மதிப்பு**
**₹ 6.00 இலட்சம்**

காரிமங்கலம் அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகளுக்கு

# அடிப்படை ஆங்கில இணைப்புப் பயிற்சி

**₹1.11 இலட்சம்**

திருப்பத்தூர் **தூய நெஞ்சக் கல்லூரி** பேராசிரியர்களின் மூலம், காரிமங்கலம் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயிலும் **650 மாணவிகளுக்கு** அடிப்படை ஆங்கில இணைப்புப் பயிற்சி ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.



இந்த பயிற்சிக்கு தேவையான பயிற்சி புத்தகங்களையும், பயிற்சி கட்டணத்தையும் ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இக்கல்வியாண்டும் அடிப்படை ஆங்கில இணைப்புப் பயிற்சிக்கான கட்டணமாக **ரூ.63334/-** மற்றும் பயிற்சி புத்தகங்களுக்காக **ரூ.47775/-** என மொத்தம் **ரூ. 1.11 இலட்சத்தை** ஐ.வி.டி.பி நிறுவனர் வழங்கி உதவினார்.

## கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி குளிர்பானம் & பிஸ்கட்

கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அரசுப் பொதுத்தேர்வு எழுதும் பத்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு மாணவியருக்கு **ரூ.55 ஆயிரம்** மதிப்பில் **குளிர்பானம்** மற்றும் **பிஸ்கட்டுகள்** வழங்கி ஊக்குவித்தது ஐ.வி.டி.பி நிறுவனம்.

**₹55 ஆயிரம்**

## தேன்கனிக்கோட்டை அரசுப்பள்ளி மாணவர்களுக்கு உணவு

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற அறிவியல் திருவிழாவில் பங்கேற்ற **500** அரசுப்பள்ளி மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி நிறுவனம் **ரூ. 37,500** மதிப்பில் உணவினை வழங்கியது.

**₹37 ஆயிரம்**

## மும்பை அலர்ட் இந்தியா தொழுநோய் நிவாரண நிறுவனத்தின் பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியம் & ஊக்கத்தொகை

₹ 22.94 இலட்சம்




அன்றாடம் தங்கள் வாழ்வில் பெரும்பான்மையான நேரத்தை தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அர்ப்பணித்து பணியாற்றும் மும்பையைச் சார்ந்த அலர்ட் இந்தியா நிறுவனத்தின் **56** பணியாளர்களுக்கு **1** மாத ஊதியமாக **ரூ.11.74 இலட்சம்,** தலா **ரூ.20,000/-** என **56** பணியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக **ரூ.11.20 இலட்சம்** என மொத்தம் **ரூ.22.94 இலட்சம்** வழங்கி உதவியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

## செயின்ட் ஜோசப் உடல் மற்றும் சமூக நல மைய பயனாளிகளுக்கு உணவுப் பொருள் தொகுப்பு

₹ 3 இலட்சம்



ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு ஏழை எளியோருக்கு உதவிடும் வகையில் பர்கூர் மற்றும் கிருஷ்ணகிரியில் செயல்படும் செயின்ட் ஜோசப் உடல் மற்றும் சமூக நலமையத்தில் உள்ள **228** பயனாளிகளுக்கு தலா **ரூ.1337/-** என மொத்தம் **ரூ.3 இலட்சம்** மதிப்புள்ள உணவுப் பொருள் தொகுப்புகளை வழங்கியது.

## கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனைக்கு

# கருப்பை உள்நோக்கும் பரிசோதனை கருவி (COLPOSCOPY)



₹ 3.68 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம், தனது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஏற்படும் கருப்பை புற்றுநோய், வாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் போன்ற புற்றுநோய்களை ஆரம்ப நிலையிலே கண்டறியும் பரிசோதனை முகாமின் வாயிலாக புற்றுநோய் அறிகுறிகள் கண்டறியப்பட்ட மகளிருக்கு, கிருஷ்ணகிரி **புனித லூயிஸ் மருத்துவமனையில்** வைத்து, பெங்களூர் **செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின்** சிறப்பு புற்றுநோய் மருத்துவர்களை வரவழைத்து **Colposcopy, Biopsy, Thermal Ablation** மற்றும் **Leep** போன்ற சிகிச்சைகளும், மார்பகப் புற்றுநோய் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு **Memogram, FNAC, Scan** போன்ற சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வகையில் கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனைக்கு, கருப்பை மற்றும் கருப்பை வாய் பரிசோதனைகளை மேற்கொள்ள உதவும் **Colposcopy** கருவியை **ரூ.3.68 இலட்சம்** மதிப்பில் வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

ஐ.வி.டி.பி நிறுவனம் இதுவரை இம்மருத்துவமனைக்கு **ரூ.29 இலட்சத்தை** செலவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஐ.வி.டி.பி யின் பிற சேவைகள்

₹ 5.26 இலட்சம்

- பாஞ்சாலியூரில் வசிக்கும் **49** திருநங்கையர் குடும்பங்களுக்கும் **25** கிலோ அரிசி தலா **ரூ.1450/-** என மொத்தம் **ரூ.71050/-** மதிப்புள்ள அரிசி பைகள்.
- மேலும் அக்குடும்பங்களுக்கு பொங்கல் விழாவை முன்னிட்டு **ரூ.68370/-** மதிப்பிலான உணவுப்பொருள் தொகுப்புகள் & போர்வைகள்.
- புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் தொன்போஸ்கோ இளைஞர் கிராமத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழுவைச் சார்ந்த **1000** உறுப்பினர்களுக்கு **ரூ.80 ஆயிரம்** மதிப்பிலான **வாட்டர் பாட்டில்கள்.**
- கிருஷ்ணகிரி மாவட்டம், சேசுராஜபுரம் கிராம மக்கள், தங்களுக்கு நடைப்பாதை பாலம் அமைக்க உதவிடுமாறு கேட்டு கொண்டதற்கிணங்க, அவர்களுக்கு உதவிடும் வகையில் ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பங்களிப்பாக **ரூ.99120/-** மதிப்பலான **கான்கிரீட் பைப்புகள்.**
- தமிழ்நாடு அரசின் வருவாய் துறையில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களில் 80 வயதை நிறைவு செய்த 3 அலுவலர்களுக்கு தலா **ரூ.5638/-** என மொத்தம் **ரூ.16914/-** மதிப்பிலான **தங்க நாணயங்கள்.**
- தர்மபுரி மாவட்டம், செல்லியம்பட்டியில் இயங்கி வரும் சிநேகசதன் நல மையத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு **ரூ.22 ஆயிரம்** மதிப்பிலான **உடைகள்**
- அருணாசல பிரதேச மாநில ஆஷா தொண்டு நிறுவன பணியாளர்களின் களப்பயிற்சிக்காக **ரூ.1.70 இலட்சம் செலவிட்டது** ஐ.வி.டி.பி நிறுவனம்.

### ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தையற்பயிற்சி மற்றும் ஆரி வேலைபாடு சிறப்பு பயிற்சி வகுப்புகள்



ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழில் திறனை மேம்படுத்தும் விதமாக ஐ.வி.டி.பி நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் தையல் மற்றும் ஆரி வேலைப்பாடுகள் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை முடிவுற்ற **15** கட்ட **தையல் பயிற்சிகளில் 450** பேரும், **8** கட்டமாக நடைபெற்ற **ஆரி வேலைப்பாடுகள் பயிற்சியில் 192** பேரும் பயிற்சியை நிறைவு செய்துள்ள நிலையில், அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

**இதுவரை இப்பயிற்சிகளின் மூலம் 642 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

## ஐ.வி.டி.பி. நிறுவனருக்கு நன்றி தெரிவித்த டைமண்ட் குழு உறுப்பினர்கள்

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வீட்டுவசதி வாரிய பகுதியில் செயல்படும் டைமண்ட் மகளிர் சுய உதவிக்குழுவில் 6 வருடங்களாக சகோதரிகளாய் இணைந்து ஒற்றுமையாக, அநேக நன்மையை அனுபவித்து வருகிறோம். ஐ.வி.டி.பி நிறுவனருக்கு ஒரு சில வரிகள் !!!

எங்கள் கிளையிலுள்ள 202 குழுக்களுக்கு
உடன்பிறவா சகோதரரே!
எங்களின் அன்பிற்கினிய தகப்பனே!
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டெடுக்க
இறைவன் ஈன்ற தங்க தலைவனே!
தங்கள் பெயரில் மட்டுமின்றி குணத்திலும் குழந்தையாய்,
தாய்வீட்டு சீதனம் தந்த எங்கள் அன்பின் உருவமே!
பணத்தையே முதன்மையாய் கொண்ட இவ்வுலகில்,
எங்களை ஒரு பொருட்டாக மதிக்காத இச்சமுதாயத்தில்,
குடும்பத்தில் மாமியார்களிடம், கணவர்களிடம்
ஒதுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்த எங்களை
அச்சமில்லை அச்சமில்லை உச்சிமீது
வான் இடிந்து வீழினும் அச்சமென்பதில்லையென
எங்கள் கல்விக்கண் திறந்த வள்ளலே!
எங்கள் இல்லங்களில் ஒளி ஏற்றி
எங்கள் நெற்றியில் வெற்றித் திலகமிட்ட தங்கமகனே!
உங்களுக்கு நன்றியோடு தலை வணங்கி
இறைவன் நீண்ட ஆயுள் அளித்து
பல்லாண்டு வாழ்வாங்கு வாழ மனமார வாழ்த்துகிறோம்!

டைமண்ட் குழு உறுப்பினர்கள்
அவுசிங்போர்டு, ஆம்பூர்,




## மனிதன் மனிதனாக வாழ
(18 அம்சங்கள்)

மிகவும் மதிக்கப்பட
வேண்டியவர்கள் – தாய் தந்தை
மிக மிக நல்ல நாள் – இன்று
மிகப் பெரிய வெகுமதி – மன்னிப்பு
மிகவும் வேண்டியது – பணிவு
மிகவும் வேண்டாதது – வெறுப்பு
மிகப் பெரிய தேவை – நம்பிக்கை
மிகக் கொடிய நோய் – பேராசை
மிகவும் சுலபமானது – குற்றம் காணல்
கீழ்த்தரமான விஷயம் – பொறாமை
நம்பக் கூடாதது – வதந்தி
ஆபத்தை விளைவிப்பது – அதிக பேச்சு
செய்யக் கூடியது – உதவி
செய்யக் கூடாதது – நம்பிக்கை துரோகம்
விலக்க வேண்டியது – சோம்பேறித்தனம்
உயர்வுக்கு வழி – உழைப்பு
நழுவ விடக் கூடாதது – வாய்ப்பு
பிரியக் கூடாதது – நட்பு
மறக்கக் கூடாதது – நன்றி




## அனுப்புதல்

சன்மதி மகளிர் மன்றம்
பெத்தனூர், போச்சம்பள்ளி - கிளை

## பெறுதல்

திரு. இயக்குநர் அவர்கள்
ஐ.வி.டி.பி, 9ஈ, சாந்தி நகர்,
கிருஷ்ணகிரி

## ஐயா – வணக்கம்

மேற்கண்ட விலாசத்தில் இயங்கி வரும் சன்மதி IVDP தொண்டு நிறுவனத்தின் மூலம் போச்சம்பள்ளி கிளையில் 12 வருடமாக குழு நடத்தி வருகிறோம். இந்த குழுவில் உறுப்பினராக உள்ள பவித்ரா கோவிந்தராஜ் ஆகிய நான் போச்சம்பள்ளியில் ஸ்ரீ அன்னை தட்டச்சு பயிலகம் வைத்துள்ளேன். நான் ஆரம்பத்தில் 2 Machine மட்டும் வைத்திருந்தேன். ஐ.வி.டி.பி சங்கத்தின் மூலம் சங்க கடன் மற்றும் லோன் எடுத்து தவறாமல் கட்டி வருகிறேன். இன்று 24 Machine & ஸ்டூல் வாங்கி உள்ளேன். இது போக 1 Computer மற்றும் 1 Printer வாங்கி உள்ளேன். தற்போது வருடத்திற்கு 100 மாணவ மாணவிகள் பயிற்சி பெற்று பயனடைந்து வருகின்றனர். ஐ.வி.டி.பி நிறுவனத்தில் உறுப்பினராக இருந்ததால் மட்டுமே என்னால் இந்த அளவிற்கு வளர்ச்சியடைய முடிந்தது.

தனி ஒரு பெண்ணாக நான் வளர்ச்சி அடைந்ததற்கு முழு காரணம் ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனமே. ஐயா அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்க!
நன்றி ஐயா!



திருமதி. பவித்ரா
சன்மதி மகளிர் மன்றம்

# Rajesthan Trip











# சிறப்பு விருந்தினர்கள் வருகை..



பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக்கல்லூரியின் இயக்குநர் அருட்பணி. **ஜான் வர்கீஸ்** அவர்களின் ஐ.வி. டி.பி வருகை



ஐ.வி. டி.பி நிறுவனத்தில் களப்பயிற்சி பெற வருகை தந்த அருணாசல பிரதேச மாநில **ஆஷா தொண்டு நிறுவன** பணியாளர்கள்



**சிங்கப்பூர் தமிழ் சங்க** உறுப்பினர்களின் ஐ.வி. டி.பி வருகை

# ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுக்கள் விவரம் (மார்ச் 2024 வரை)

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள்: கிருஷ்ணகிரி, தர்மபுரி. திருப்பத்தூர் & வேலூர்

ஐ.வி.டி.பி.கிளைகள் : 90 ✸ உதவிக்குழுக்கள்: 16,146 ✸ சுய உதவிக்குழு உறுப்பினர்கள்: 2,90,628

ஐ.வி.டி.பி.குழுக்களின் மொத்த சேமிப்பு : ரூ. 1341.24 கோடி

ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு: ரூ. 919 கோடி

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2023 வரை | ஏப்ரல் 2023–மார்ச் 2024 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ரூ. 6171.14 கோடி | ரூ. 1218.67 கோடி | ரூ. 7389.81 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை | ரூ. 4420.13 கோடி | ரூ. 321 கோடி | ரூ. 4741.13 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ரூ. 295.54 கோடி | ரூ. 61 கோடி | ரூ. 356.54 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ரூ. 244.40 கோடி | ரூ. 14.7 கோடி | ரூ. 259.01 கோடி |
| **மொத்தம்** | ரூ. 11131.21 கோடி | ரூ. 1615.37 கோடி | ரூ. 12746.58 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

| விவரம் | மார்ச் 2023 வரை | ஏப்ரல் 2023–மார்ச் 2024 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம். நாட்றாம்பாளையம். தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ரூ. 5.00 கோடி | | ரூ. 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ரூ. 2.00 கோடி | | ரூ. 2.00 கோடி |
| மருத்துவமனை. சிறைகள் தொழுநோயாளிகள். முதியோர் இல்லம், ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம். கடைநிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு | ரூ. 2.63 கோடி | ரூ. 50.59 இலட்சம் | ரூ. 3.14 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி | ரூ. 53.99 கோடி | ரூ. 7.14 கோடி | ரூ. 61.13 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள்: குடிசை தீ விபத்து நிதியுதவி, கோசலை விருது, ஊக்குனர் பரிசு ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம் பரிசுகள். தையல் பயிற்சிகள், உறுப்பினர்களுக்கான வெள்ள நிவாரணப்பணி. விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை | ரூ. 9.09 கோடி | ரூ. 90.44 இலட்சம் | ரூ. 10 கோடி |
| பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு. உதவித்தொகை, சீருடை, மருத்துவச் செலவுகள் | ரூ. 8.09 கோடி | ரூ. 87.96 இலட்சம் | ரூ. 9.02 கோடி |
| ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி. கோட்டையூர். ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் பயிற்சி மையம், அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ரூ. 15.79 கோடி | ரூ. 1.28 கோடி | ரூ. 17.07 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ரூ. 21.27 கோடி | ரூ. 2.3 கோடி | ரூ. 23.57 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | ரூ. 55.11 இலட்சம் | ரூ. 63 ஆயிரம் | ரூ. 55.74 இலட்சம் |
| கார்கில் போர். குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல். கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா, நீலகிரி, சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக | ரூ. 4.91 கோடி | | ரூ. 4.91 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ரூ. 3.72 கோடி | | ரூ. 3.72 கோடி |
| இருளர் நிவாரணப் பணிகள் | ரூ. 1.22 கோடி | | ரூ. 1.22 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் புற்றுநோய் பரிசோதனை மற்றும் மருத்துவச் சிகிச்சைக்காக | | ரூ. 2.6 கோடி | ரூ. 2.6 கோடி |
| **மொத்தம்** | ரூ. 128.26 கோடி | ரூ. 15.62 கோடி | ரூ. 143.94 கோடி |

(Regd. No. 69/79)

**ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்**

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் மாவட்டங்கள்

ஐ.வி.டி.பி. இல்லம், 9ஈ சாந்தி நகர் 3 வது கிராஸ். கிருஷ்ணகிரி–635 001.

Ph: 04343-232 129, 236 420 e-mail: francis@ivdpkrishnagiri.org Web: www.ivdpkrishnagiri.org